**கவனிக்க.-** 2019.08.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் (IV) (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2137 - 2019 අගෝස්තු මස 16 වැනි සිකුරාදා - 2019.08.16
2137 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 136 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** (i) உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச் சீட்டுக்கள் (திருத்தம்) சட்டமூலம் 2019,ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தம்) சட்டமூலம்2019,ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, செத்தெம்பர் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

135-B81551-353 (2019/08)

# நானாவித அறிவித்தல்கள்

## அறிவித்தல்

(குடியியல் நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்தி) கொழும்பில் நடாத்தப்படுகின்ற
மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்

வழக்கு இலக்கம் : HC/ CIVIL/ 51/2019/Co
தன்மை : ஒடுக்குதல் நடவடிக்கை
முறை : சுருக்க
பெறுமதி : ரூபா 56,559,000

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 270 (உ) மற்றும் (ஊ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் 271(அ) ஆகிய பிரிவுகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு, காலி வீதி, இல. 134 இல் அமைந்துள்ள சேறக இன்வெஸ்ட்மன்ட் லிமிடட் (PB879) நீதிமன்றத்தால் ஒடுக்குதல் சம்பந்தமாக செய்யப்படுகின்ற விண்ணப்பம்.

எஸ்எம்பி லீசிங் பீஎல்சீ,
இல. 282/1, சீபீஎஸ் கட்டடம்,
காலி வீதி, கொழும்பு 03.

மனுதாரர்

மேல் மாகாணத்தின் கொழும்பில் நடைபெறுகின்ற குடியியல் நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்தும் மேல் நீதிமன்றத்தால் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று கொழும்பு 03, காலி வீதி, சீபிஎஸ் கட்டடம், இல. 282/ 1 இன் எஸ்எம்பி லீசிங் பீஎல்சீயினால் அந்நீதிமன்றத்தில் 2019, யூலை மாதம் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அம்மனுவை 2019, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கு பணிக்கப்பட்டுள்ளது. அம்மனுவின் மீது கட்டளையொன்றைச் செய்வது தொடர்பாக இணக்கம் அல்லது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அதற்காக வழக்கு விசாரணை நடைபெறும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது தனது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியின் மூலம் தோற்றலாம். மனுவின் பிரதியொன்று அவசியமாகின்ற கம்பனியின் எவரேனும் கடன்தருநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு அதற்காக தேவைப்படுத்தப்படுகின்ற கட்டணமொன்றைச் செலுத்திய பின்னர் கீழே கையொப்பமிடுபவரால் வழங்கப்படும்.

போல் ரத்நாயக்க அஸோஸியேட்ஸ்,
சட்டத்தரணிகள் பிரசித்த நொத்தாரிசுகள் மற்றும் சட்ட ஆலோசகர்கள்,
இல. 59, கிரெக்கரிஸ் வீதி,
கொழும்பு 07.

**குறிப்பு**.-அம்மனுவை விசாரணை செய்யும் போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவரினால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட போல் ரத்நாயக்க அஸோஸியேட்ஸ் சட்டத்தரணிகள் கம்பனிக்கு தான் அவ்வாறு எண்ணுகின்றதென்பதற்கான எழுத்திலான அறிவித்தலொன்றை கையளித்தல் அல்லது அஞ்சலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அவ்வறிவித்தலில் அந்த ஆளின் பெயர் மற்றும் முகவரியும் அல்லது வியாபார நிறுவனமொன்றாயின் வியாபார நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியும் குறிப்பிடப்பட வேண்டுமென்பதுடன், அந்த ஆளினால் அல்லது வியாபார நிறுவனத்தினால் அல்லது அவரது அல்லது அவர்களினது சட்டத்தரணியால் (இருப்பின்) கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், மேலே பெயர் குறிப்பிடப்பட்ட நிறுவனத்திடம் 2019, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி பிற்பகல் 5 மணிக்கு முன்னர் கிடைக்கப்பெறக் கூடியவாறு கையளிக்கப்படுதல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவ்வாறு கிடைக்கப்பெறக்கூடியவாறு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

8-646

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.